# உங்கள் பிள்ளை வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கு உதவுங்கள்

பள்ளிகளும் பெற்றோரும் ஒன்றிணைந்து செயற்பட்டு நமது பிள்ளைகளுக்கு ஆதரவளிக்கும்போது அவர்கள் சிறப்பாகச் செயற்படுவார்கள். இதை நடைமுறைப்படுத்துவதற்கான சில குறிப்புகள் இங்கே வழங்கப்பட்டுள்ளன...



## உங்கள் பிள்ளையைப்பற்றி அறிந்துகொள்வதற்கும் ஆதரவளிப்பதற்கும் பள்ளியுடன் இணைந்து செயற்படுங்கள்

- உங்கள் பிள்ளையின் கல்வி சார்ந்த மற்றும் கல்வி சாராத விஷயங்கள் குறித்து ஆசிரியர்களுடன் தொடர்ந்து உரையாடுங்கள் — இது உங்கள் பிள்ளையின் வளர்ச்சியைச் சிறப்பாக வழிநடத்த உங்களுக்கு உதவும்.
- உங்களுடன் தொடர்புகொள்ள ஆசிரியர்கள் விரும்பும் வழிமுறையை அறிந்துகொள்ளுங்கள் — அவர்கள் தங்களுடைய கைத்தொலைபேசி எண்களைப் பகிர்ந்துகொள்ள வேண்டிய அவசியமில்லை.
- உங்கள் வினாக்களுக்கு ஆசிரியர்களால் உடனடியாக விடையளிக்க முடியாமல் போகலாம் என்பதைப் புரிந்துகொள்ளுங்கள்.

## தன்னை மற்றவர்களுடன் தொடர்புபடுத்திக்கொள்ள உங்கள் பிள்ளைக்கு உதவுங்கள்

- உங்கள் பிள்ளை வேறுபாடுகளுக்கு மதிப்பளிப்பதற்கும் கருத்து வேறுபாடுகளைச் சுமூகமாகத் தீர்த்துக்கொள்வதற்கும் உதவ, ஆசிரியர்களுடன் இணைந்து செயற்படுங்கள்.
- எந்தச் சம்பவமாக இருந்தாலும் ஒரு முடிவை எடுப்பதற்கு முன்னர், உண்மை நிலவரங்களைச் சரிபார்ப்பதற்குப் பள்ளியை அனுமதியுங்கள். இது எல்லாத் தரப்பினருக்கும் ஏதுவான, பாரபட்சமற்ற முடிவை எடுப்பதற்கு உதவும்.

## உங்கள் பிள்ளை நல்ல பழக்கங்களை வளர்த்துக்கொள்ள உதவுங்கள்

- வாசிப்பில் மகிழ்வுடன் ஈடுபடுவதற்கும் தன் வீட்டுப்பாடத்தைத் தானே செய்து முடிப்பதற்கும் உங்கள் பிள்ளைக்கு உகந்த வீட்டுச்சூழலை உருவாக்குங்கள்.
- உங்கள் பிள்ளை உறங்குவதற்கும் விளையாடுவதற்கும் சரியாக நேரத்தை ஒதுக்கி ஆரோக்கியமான, சமநிலையிலான வாழ்க்கை வாழ்வதற்கு ஊக்கமளியுங்கள்.

## உங்கள் பிள்ளை தன்னைத் தானே சுயமாக நிர்வகித்துக்கொள்ள உதவுங்கள்

- உங்கள் பிள்ளை தனது நேரத்தை நிர்வகித்துக்கொள்ள வழிகாட்டுங்கள்.
- வீட்டுவேலைகளில் உதவி செய்யுமாறு உங்கள் பிள்ளையை ஊக்கப்படுத்துங்கள்.

**பெற்றோரும் பள்ளிகளும் ஒன்றிணைந்து செயற்படும்போது நமது பிள்ளைகள் வெற்றி பெறுவார்கள்.**

Ministry of Education
SINGAPORE